<u>**In the Court of the Additional District Munsif, Padmanabhapuram.**</u>

O.S.No.. 94/2020 தேதி- 22.01.2026

(D.W.2) . பத்மதாஸ்

<u>**குறுக்கு விசாரணை**</u>

வாதி என்ன பரிகாரம் கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் வழி அவகாசம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார். நான் சாட்சி சொல்கிற வழக்கு வாதிகளால் வழிகேட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்காகும். இந்த வழக்கின் 1 ஆம் பிரதிவாதி மற்றும் 2 ஆம் பிரதிவாதி யார் என்கிற விபரம் தெரியுமா என்றால் 1 ஆம் பிரதிவாதியின் பெயர் கலஸ்டின், 2 வது பிரதிவாதியின் பெயர் தேவதாஸ் ஆகும். வாதியின் பெயர் என்ன என்றால் ஞானதாஸ். நான் கலஸ்டின்னுக்காக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் கலஸ்டினுக்கு 1/2 சென்ட் நிலத்தை கிரையம் கொடுத்துள்ளேன். அதன் அடிப்படையில்தான் அவரை எனக்கு தெரியும் எந்த வருடத்தில் கிரையம் கொடுத்தேன் என்று எனக்கு ஞாபகமில்லை. நான் யாரிடமிருந்து 1/2 சென்ட் நிலத்தை வாங்கினேன் என்றால் விலைக்கு வாங்கவில்லை அது என் அப்பாவின் சொத்தாகும்.

என் அப்பாவிற்கு எப்போது சொத்து கிடைக்கப்பெற்றது என்றால் வெகுகாலத்திற்கு முன்பே என் அப்பாவிடம் சொத்து இருந்தது. 1/2 சென்ட் சொத்து என்னு தனியாக சொத்து கிடையாது. மொத்தமாக இ,ருக்கும் சொத்தில்தான் மேற்படி 1/2 சென்ட் அமைந்துள்ளது. மேற்படி 1/2 சென்ட் சொத்தின் எல்கை என்ன என்றால் கிழக்கில் விஜயகிரி தங்கச்சி, தெற்கு ஞானதாஸ், வடக்கு சுவாமிதாஸ், மேற்கு விசாலம் ஆகியோர்களின் சொத்து உள்ளது.

எனது அப்பாவிற்கு 1969 ஆம் ஆண்டு நடைபெற்ற பாகப்பிரிவினை பத்திரத்தின் அடிப்படையில் என் அப்பாவிற்கு சொத்து கிடைத்து என்று சொன்னால் சரியா என்றால் அது எனக்கு தெரியாது. என் அப்பாவிற்கு அவரது அப்பா கொடுத்து சொத்து. என் அப்பாவின்அப்பா பெயர் பத்மநாபபிள்ளை, அப்பா பெயர் கிருஷ்ணபிள்ளை. வழக்கின் வாதியின் சொத்தும் என் அப்பாவிற்கு உரிமைப்பட்ட சொத்தும் ஒரே குடும்பத்தை சேர்ந்த சொத்துதானா என்றால் வேறுவேறு சொத்தாகும். எனது தாத்தாவிற்கு எந்த ஆவணத்தின் அடிப்படையில் எந்த ஆண்டு

கிடைக்கப்பெற்றது என்றால் ஆண்டு தெரியாது. எந்த பத்திரத்தின் அடிப்படையில் வந்தது என்றால் அது எனக்கு தெரியாது.

இந்த வழக்கு சொத்து சம்பந்தமாக 1969 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட பாகப்பிரிவினை ஆவணமான வா.சா.ஆ. 1 ஆவணத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் நான் பார்த்துள்ளேன். மேற்படி ஆவணத்தின் விபரம் தெரியாது. படித்துப்பார்க்க வேண்டிய தேவை இல்லை. வழக்கு சம்பந்தமாக நீதிமன்ற ஆணையர் வருவதை பார்த்தேன் அவர் அளக்கும்போது நான் அங்கு இல்லை. எனது தாத்தாவிற்கு உரிமைப்பட்ட சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் எனக்கு ஞாபகமில்லை. குமரன்குடி கிராமத்தில் உள்ளது. 84 சென்ட் சொத்து எனது தாத்தாவிற்கு உரிமைப்பட்டது.

மேற்படி 84 சென்டின் எல்கை என்னஎன்றால் வடக்கே மேகன், கிழக்கே எனது அம்மாவான ஜகதாம்பிகை சொத்து, மேற்கு ஞானதாஸ், தெற்கு பாலகிருஷ்ணன்பிள்ளை சொத்து உள்ளது. மேற்படி 84 சென்ட் சொத்தில் பாதியை எனது தங்கை தேவிசுமங்கலாவிற்கு எனது அப்பா கொடுத்தார். எனது தங்கைக்கு கொடுத்த சொத்தில் வீடு எதுவும் இல்லை. மேற்படி 84 சென்டில் தங்கைக்கு கொடுத்தது போக மீதி சொத்து என் வசம் இருந்தது. எனது கைவசத்தில் இருந்த சொத்தில் வீடு இல்லை. பட்டா எனது பெயரில் இல்லை எனது அப்பா பெயரில் இருந்தது.

எனது தங்கை அவரது கைவசத்தில் இருந்த சொத்தை சிலருக்கு கிரையம் கொடுத்துள்ளார். எனது கைவசத்திலிருந்த சொத்திலிருந்து 8 1/2 சென்டை 2 ஆம் பிரதிவாதியின் தந்தையான தேவசாகத்திற்கு எனது அப்பா கிரையம் கொடுத்தார். 8 1/2 சென்ட் விலைக்கு கொடுத்த விபரம் எனக்குத் தெரியும். 8 1/2 சென்ட் கிரையம் கொடுத்ததுபோக மீதமுள்ள சொத்து எனது கைவசத்தில் இருக்கிறதா என்றால் வேறு நபர்களுக்கு கிரையம் கொடுத்துவிட்டேன். யார்யாருக்கு கிரையம் கொடுக்கப்பட்டது என்றால் விஜயகிரி தங்கைக்கு 10 சென்ட் நிலத்தை இலவசமாக எழுதிக்கொடுத்தேன். கிழக்கு பக்கமிருக்கும் 10 சென்ட் சொத்தை கென்சைன் என்பவருக்கு கிரையமாக கொடுத்தேன். மீதமுள்ள சொத்து என் கைவசம் இருக்கிறது.

தற்போது என்னிடம் 30 சென்ட் சொத்து உள்ளது. மேற்படி 30 சென்டிற்கு என் பெயரில் பட்டா எதுவும் இல்லை. சாட்சி தற்போது அப்பாவின் சொத்தில் 5 1/2 சென்ட்

மட்டும் வீடும் தன் கைவசம் இருப்பதாகவும் மேற்சொன்ன 30 சென்ட் சொத்து அவரது அம்மாவின்மூலம் வந்த சொத்து என சாட்சி கூறுகிறார். 5 1/2 சென்ட் சொத்திற்கு எல்கை என்ன என்றால் கிழக்கு பக்கம் தேவி சுமங்கலா, மேற்கு பக்கம் கனகராஜ், வடக்கு பக்கம் மோகனநாயர் தற்போது வேறு ஒருவருக்கு விலைக்கு கொடுத்துவிட்டார் பெயர் தெரியாது. தெற்கு பக்கம் சுவாமிதாஸ் ஆகியோரின் சொத்து உள்ளது.

என் அம்மாவின் மூலம் எனக்கு கிடைத்த 30 சென்ட் சொத்து , என் அப்பாவின்மூலம் எனக்கு கிடைத்த 5 1/2 சென்ட் சொத்தின் கிழக்கு பக்கம் இருக்கிறது. 2 வது பிரதிவாதியின் தூண்டுதலின் பெயரில் தான் அவருக்காக நான் வந்து சாட்சியம் கொடுக்கிறேன் என்றால் சரியல்ல . எனது சாட்சியம் இந்த வழக்கிற்கு எந்த வகையிலும் பொருந்தாது என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கு 1969 ல் உள்ள பத்திரம்தான் மூலபத்திரம் அந்த பத்திரத்தை தெரியாது என நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 2 வது பிரதவாதி கூறுவதுபோல் அங்கு சொத்தே கிடையாது அதை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.